**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண். 115/2023**

**02.09.2024**

**வா.சா. 1 அன்புச்செல்வம்**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை -**

தாவா சொத்து எங்களுடைய இடம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை 2 அயிட்டங்களாக குறிப்பிட்டுள்ளேன். முதல் அயிட்ட சொத்து தோட்டமாக பயன்படுத்தப்படுகிறது. 2ம் அயிட்ட சொத்தில் குப்பை கொட்டியும் கொட்டாய் அமைத்தும் விவசாய கருவிகள் வைத்தும் அனுபவிக்கிறேன். மேற்படி 2 அயிட்டம சொத்துக்களும் நான் வசிக்கும் வீட்டிற்கு பின்புறம் உள்ளன எ ன்றால சரிதான். நான் வசிக்கும் வீட்டிற்கு பட்டா உள்ளது. வீட்டிற்கான உரிமை ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களுக்கு பட்டா பெற்றுள்ளேனா என்றால்கேட்டுள்ளேன், இன்னும் கொடுக்கவில்லை. 3,4,5ம் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களிலிருந்து என்னை அகற்ற அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் இல்லை. தாவா சொத்திலிருந்து எங்களை அப்புறப்படுத்தக்கூடாது என நாங்களாகத்தான் நீதிமன்றம் வந்தோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு பக்கத்தில் இருப்பவர்களை ஊராட்சி மன்றம் சார்பாக அப்புறப்படுத்திவிட்டார்கள் என்றால ் சரிதான். அவ்வாறு அகற்றும்போது 2 முதல் 6 பிரதிவாதிகளும் போலிசாரும் வந்திருந்தார்கள். அவ்வாறு அகற்றும்போது எங்கள் இடம் என்று நாங்கள் ஆட்சேபணை செய்தபோது நாங்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்று கூறி அகற்றிவிட்டார்கள். அவ்வாறு ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது தாவா ஏ, பி அட்டவணை சொத்துக்களிலும் ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அகற்றப்பட்டபின்பு தாவா சொ்ததுக்கள் ஊராட்சி மன்ற கட்டுப்பாட்டில்தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் நான் தாக்கல் செய்திருப்பது தாவா சொத்துக்களுக்கான ஆவணங்கள் என்பதை ஒத்துரைப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களுக்கான ஜக்பந்தியும் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பை அகற்றிய சொத்துக்கான ஜக்பந்தியும் ஒன்றுதான் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிரயப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் ஆக்கிரமிப்பை அகற்றியபின்பும் உள்ள அளவுகளை காட்ட அளவையருக்கு படி கட்டி அளந்தேனா என்றால் இல்லை. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நான் வசிக்கும் வீட்டிற்கானது என்றாலும் அதன் அடிப்படையில் எனக்கு பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்றாலும் தாவா சொத்துக்கள் அரசுக்கு பாத்தியப்பட்டவை என்பதால் அதில் எங்களுடைய ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன என்றால் சரிதான், தாவா சொத்துக்களில் நான் கட்டியிருந்த கழிவுநீர் தொட்டி, கொட்டாய், தென்னைமரங்கள், வாழைக்கன்று, புளியங்கன்று ஆகியவற்றை அகற்றிவிட்டார்கள். கோதண்டன் என் பக்கத்து வீட்டுக்காரர், சித்தப்பா மகன். கோதண்டன் நான் தாக்கல் செய்திருப்பது போன்றே இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆக்கிரமிப்புகளை அகற்றும்போதுதான் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போதே ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன என்றால் சரிதான். இந்நிலையில் நான் தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதாக கூறி பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு

தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்துக்கானவை அல்ல என்றாலும் நான் வசிக்கும் வீட்டிற்கானவை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.